
# மறைந்த ஈழத்து முற்போக்கு எழுத்தாளர் அகஸ்தியருக்கு ஜேர்மனியில் விழா

**- ப.பசுபதிராசா (வுப்பெற்றால், ஜேர்மனிஸ -**



ஈழத்து முற்போக்கு எழுத்தாளர்களில் ஒருவரான அமரர் எஸ். அகஸ்தியர் அவர்களால் எழுதப்பட்ட **லெனின் பாதச்சுவடுகளில், மானிட தரிசனங்கள்** ஆகிய இரு நூல்களின் அறிமுக விழா ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தினரால் கடந்த 25-10-2009 அன்று ஜேர்மனி-டியூஸ்பேர்க் மாநகரில் வெகு விமரிசையாக நடைபெற்றது. இவ்விழாவுக்கு லண்டன் தமிழ் வானொலி அனுசரணை வழங்கியது. இலக்கிய கலாரசனைக்கு எப்போதுமே இருக்கின்ற எழுத்தாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், ஊடகவியலாளர்கள் ஆர்வமாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அகஸ்தியரின் வாசகர்கள், அபிமானிகள், இலக்கிய உறவுகள் புடைசூழ அந்த இலக்கியவிழா இனிதாக ஆரம்பமானது.

எழுத்தாளர் திருமதி.ஜெயா.நடேசனும் எழுத்தாளரும் ஊடகவியலாளருமான திருமதி.நவஜோதி.யோகரட்ணம் அவர்களும் மங்களகரமாக குத்துவிளக்கேற்றி ஏற்றி வைத்து விழாவை ஆரம்பித்து வைத்தனர். விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த அனைத்துப் போராளிகளையும், பொதுமக்களையும், தமிழ் இலக்கியவரலாற்றில் தம்முயிரீந்த எழுத்தாளர்களையும் நினைவு கூர்ந்து மௌன அஞ்சலி நிகழ்த்தப்பட்டது. எழுத்தாளர் ப.பசுபதிராசா அவர்களின் பாடல்வரிகளுக்கு தமிழ் மொழி வாழ்த்துப்பா பாடி சங்கீத ஆசிரியை திருமதி.கலைவாணி. ஏகானந்தராசா அவர்கள் விழாவுக்குச் சிறப்புச் சேர்த்தார். விழாவுக்கு வந்திருந்த அனைவரையும், எழுத்தாளர் ப.பசுபதிராசா வரவேற்றுப் பேசினார். ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவரும், மண் சஞ்சிகையின் ஆசிரியருமான வ.சிவராசா அவர்கள் தலைமையுரை ஆற்றிய போது உலகம் வாழ் தமிழ் எழுத்தாளர்கள் படைப்பாளிகளை ஊக்குவிப்பதற்காகவே அடிப்படை நோக்கமாகக் கொண்டு ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் ஏழு ஆண்டை நிறைவாக்கும் இந்நேரம் மறைந்து போன ஒரு ஈழத்துப் படைப்பாளிக்கு முதல் மரியாதை செய்யும் வித்தியாசமான இலக்கியக் களம் இதுவென்றார். அறைகளுக்குள் இருந்தவாறு விளம்பரத்திற்கும் கண் துடைப்புக்கும் போலியாகவும் இலக்கியம் படைக்கும் எழுத்தாளர்களை சாடியதுடன், இவர்களை ஊக்குவிக்கும் தமிழ் ஊடகங்கள் மீதும் கவலை கொண்டார். தொடர்ச்சியாக ஒத்துழைத்து வரும் எழுத்தாளர்களைப் பாராட்டியதுடன் ஏனைய எழுத்தாளர்களை இணைந்து பணியாற்ற இருகரம் நீட்டி நின்றார். அகஸ்தியர் அவர்களின், எழுத்து வடிவமாய் குவிந்து கிடக்கும் நகைச்சுவைப் பகுதிகளைச் சுட்டிக்காட்டிச் சுவை ததும்பப் பேசி சபையினரோடு நினைவைப் பகிர்ந்து தன் தலைமையுரையை நிறைவு செய்தார்.


அமரர் அகஸ்த்தியர் அவர்கள் எழுதி இலண்டனில் வெளியீடு




செய்யப்பட்ட **லெனின் பாதச்சுவடுகளில்** என்ற நூல் முதலில் அறிமுகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. முதற் பிரதியை சங்கத் தலைவர் வெளியிட எழுத்தாளரும், ஜேர்மனிய விஜயலட்சுமி ஞாபகார்த்த சிறுவர் கழகத்தின் பொறுப்பாளருமான க.பத்மகுணசீலன் அவர்கள் பெற்றுக் கொண்டார். இவர் இதைப் பெற்றுக் கொண்டு கருத்துரை வழங்குகையில் படைப்பாளி ஒருவரது படைப்புக்களை வாசித்து அறிவதே படைப்பாளிக்குக் கொடுக்கப்படும் மரியாதை என்று குறிப்பிட்டதுடன் நாமும் எமது சந்ததிகளும் வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். அடுத்த நூலான **மானிட தரிசனங்கள்** என்ற நூலையும் சங்கத் தலைவர் வெளியிட லண்டன் சுடர்ஒளி சஞ்சிகை அமைப்பின் சார்பில் ஜேர்மனி நொய்ஸ் நகரைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை-ரவீந்திரன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

லெனினின் பாதச்சுவடுகளில் நூல் மீதான அறிமுகத்தை தன் கவிவளம் மிக்க சொற்கோர்வையால் அணிசெய்த ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கப் பொருளாளர், கவிஞர் அம்பலவன்-புவனேந்திரன் அவர்கள் சமூகக் கொடுமைகளை வெட்டிச் சாய்க்க முற்போக்குக் கருத்தை கருவியாக்கி களம் புகுந்த இலக்கியப் போர்வீரன் எழுத்தாளர் அகஸ்தியர் எனப் புகழாரம் செய்து கொண்டார்.

இந்த நூல் மீதான கண்ணோட்டத்தை சங்கத்தின் செயலாளர் எழுத்தாளரும் மாக்ஸிய ஆர்வலருமான தமிழ்மணி க.அருந்தவராசா அவர்கள் நிகழ்த்தினார். ஒரு எழுத்தாளனின் காலத் தேவை அவனின் சமூகத்தாக்கம் உலகம் பற்றிய தெளிவான தொலை நோக்கு இவற்றை எல்லாம் கருத்திற்கொண்டு தான் சார்ந்த சமூகத்தின் சத்தியமான



தாக்கத்தை ஏற்படுத்துபவனே உண்மைப் படைப்பாளி என்ற அவர் எழுத்தாளர் அகஸ்தியர் அக்கருத்துக் கோளின் காலவழிகாட்டியானவர் என எடுத்துரைத்தார். 92 வருடங்களுக்கு முன்பு ரஷ்யாவில் அக்டோபர் புரட்சி தோன்றி வெற்றி பெற்ற அக்டோபர் 25ம் திகதி அன்றாகும். அன்றைய தினம் இன்று. அகஸ்த்தியரின் லெனின் பாதச்சுவடுகளில் நூலும் அக்டோபர் 25 அதாவது இன்று இந்த நூலும் அறிமுகமாவது நூல் ஆசிரியருக்கும் புரட்சிக்கும் உரிய ஆத்மார்த்த தொடர்பைக் குறிப்பிட்டுச் சொன்னார். அக்டோபர் புரட்சியில் லெனினின் ஆழுமையை அகஸ்தியர் இலகுதமிழில் சுவைபடக் கொண்டு வந்திருப்பதை நூலிலிருந்து மேற்கோள்களை எடுத்துக்காட்டினார்.

சோவியத் நாட்டிலே லெனின் எடுத்த புரட்சி ஆனைக்கோட்டையைச் சேர்ந்த அகஸ்தியரின் கவனத்தை ஈர்த்தது என்றால் அதற்கு அகஸ்தியரின் சமுதாயப் பிரக்ஞையும், மானுடநேயமுமே காரணம் என்று பேராசிரியர் தில்லைநாதன் இந்நூலின அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்தின் சுதந்திரத்துக்கு பிற்பட்ட 50ஆண்டுகால முற்போக்கு இலக்கிய வரலாற்றில் தனிப்பெரும் ஆளுமையாகத் திகழ்ந்த அகஸ்தியர் தனது இறுதிநாள்வரை மார்க்சிய ஒளியில் இலக்கியத்தை தரிசித்தவர் என்று இந்நூலில் அகஸ்தியரின் பன்முக ஆளுமைபற்றி எழுதியுள்ள வீரகேசரி ஆசிரியர் வி.தேவராஜ் சுட்டிக்காட்டியுள்ளார்.

லெனினின் நூற்றாண்டு விழாவையொட்டி 1970களில் எழுதப்பட்ட லெனின்பாதச்சுவடுகள் என்ற இந்த விவரணச்சித்திரய்களை எழுதிய எனது தந்தைக்கு ஒக்டோபர் புரட்சி ஆதர்சமான தொழிலாள வர்க்கப் புரட்சியாகத் திகழ்ந்தது. ஈழத்தின் சமூக முரண்பாடுகளை தன் இலக்கியப் படைப்புகளிலே அழகாக வெளிப்படுத்தியுள்ளார் என்று என்னுள் வாழும் என் தந்தை என்ற தலைப்பில் அகத்தியர்பற்றி இந்நூலில் எழுதியுள்ள அவரது மகள் நவஜோதி யோகரட்ணம் தெரிவித்துள்ளார் என்பது போன்ற விடயங்களை நூலிலிருந்து அருந்தவராசா எடுத்துரைத்தமை சிறப்புப் பெற்றிருந்தது.

மேலும் தனது கருத்துரையில் இப்புத்தகம் உருவான விதத்தில் புரட்சிக்குரிய காலங்கள் இடம்மாறிக் கட்டுரை வடிவங்களாக அமைந்து தொகுக்கப்பட்டுள்ளது. அவை சரியாக ஒழுங்கு படுத்தப்பட்டிருப்பின் இச்சிறப்பான நூல் இன்னும் சிறப்படைந்திருக்கும் என்றும் கூறித் தனது கண்ணோட்டத்தை நிறைவு செய்தார்.

மானிட தரிசனங்கள் என்ற அகஸ்தியரின் அடுத்த நூலை எழுத்தாளர் பொன். புத்திசிகாமணி அவர்கள் நயம்பட அறிமுகம் செய்தார். மக்களுக்குள் சென்று மக்களின் ஆதங்கங்களை அறிந்து பின் அவர்கள் மூலம் அவர்களோடு பேசும் அதிசயத்தை நிகழ்த்திய அற்புதப் படைப்பாளி அகஸ்தியர் என்றார்.

இந்நூல் பற்றிய கண்ணோட்டத்தை ஜேர்மன் கல்விச்சேவையின் தலைவர், எழுத்தாளர் சங்கத்தின் உப தவைர், எழுத்தாளர், தமிழ்மணியுமான பொ.சிறீஜீவகன் அவர்கள் நூலுக்குள் அடக்கப்பட்ட 38 தரிசன வடிவங்களுக்குள் தாவித்தாவி பொருள் கொணர்ந்து மக்களின் படைப்பாளியின் மானிட ஈடேற்றத்தைப் புரியவைத்த இவரின் பார்வை சபையோரை மிகவும் கவர்ந்தது. இவரின் கண்ணோட்டத்தின் பாங்கும் பரிவும் இந்த எழுத்து நடையை தன் ஆயுதமாக்கிய எழுத்தாளனின் வெற்றியின் விளைவே என்றார். மேலும் தனது கருத்துரையில் இடதுசாரிக் கருத்துக்கள் என்றால் ஏதோ படித்தோர் போற்றித் தொழும் பட்டயமல்ல…எப்பொழுதும் சாத்தியமாகிக் கொண்டே எமக்குள் இருக்கும் இருப்புக்கள் என்பதற்கான ஆதாரங்களை எடுத்துக்கூறியதுடன் சமூகத்துக்காகத் தம்மை அர்ப்பணித்து வாழ்ந்து மறைந்த இடதுசாரிகளையும் அவர்களின் செயற்பாடுகளையும் எடுத்துக்கூறி அவர்களை நினைவுபடுத்தி பெருமை சேர்த்துக் கொண்டார்.

தொடர்ந்த நிகழ்ச்சியில் லண்டனில் இருந்து வருகை தந்திருந்த ஊடகவியலாளரும் சட்டஆலோசகரும் எழுத்தாளர் அகஸ்தியரின் மருமகனுமான எஸ்.பி.யோகரட்ணம் அவர்கள் தமிழர் வாழ்வில் அகஸ்தியர் என்னும் தலைப்பில் உரையாற்றினார். அகஸ்தியரோடு தான் கொண்டிருந்த உறவின் நிமிர்த்தம் ஒரு சராசரி வாசகனைத் தாண்டி அவரின் பல்வேறு பரிணாமங்களை அருகில் இருந்து உணர்ந்ததை சுவாரசியமாக எடுத்துரைத்தார். தனக்கான இலட்சியப் பாதையை உறுதி செய்து இறுதிவரை தான்கொண்ட கொள்கையோடு நெறிதவறாது வாழ்ந்து காட்டியுள்ளார். இலங்கையில் மலையக மக்கள்,
தலித்திய மக்கள், தமிழ் சிங்கள இஸ்லாமிய மக்கள் மீதான பார்வை பேரினவாத அரசுகளின் அடக்குமுறை என்று அகலக்கால் பதித்த அவரின் ஆளுமையை எடுத்துக்கூறியதோடு புகலிட மண்ணிலும் தாயக மண்ணிலும் அவர் பின்னால் அணி திரளும் எழுத்துலக வல்லுநர்களை உருவாக்கிய

வல்லவர் எனவும் குறிப்பிட்டதோடு அவரின் எழுத்துக்கள் மறைந்து போகாமல் உயிர்வாழ ஒத்துழைப்பு வழங்கிவரும் ஜேர்மனிய தமிழர் எழுத்தாளர் சங்கத்தினருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.




அதன் பின்பு அகஸ்தியரின் மகளும் எழுத்தாளரும் ஊடகவியலாளருமான திருமதி.நவஜோதி.யோகரட்ணம் அவர்கள் தனது பதிலுரையை வழங்கினார். மகளான இவர் தந்தையாரின் சிறப்பான குணாதிசயங்களைக் கோடிட்டுக் காட்டினார். ஒரு உண்மையான எழுத்தாளனான தன் தந்தையில் கொண்டிருந்த மதிப்பையும் பற்றையும் எடுத்துரைத்தார். அவரது இலட்சிய தாகத்தை இல்லாது செய்ய எழுந்த ஆதிக்க கரங்களின் அடக்கு முறைகளுக்குள் தன் தந்தை ஒடுக்கப்பட்டதை கண்ணீர் மல்கக் குறிப்பிட்ட அவர் தந்தையாரின் வெளியீடுகள் நூல்கள் ஆவணங்கள் அரச பயங்கரவாதத்தால் தீயிட்டுக் கொழுத்தப்பட்ட சம்பவங்களை வேதனையுடன் எடுத்தரைத்தார். தாம் அறியாமலே அகஸ்தியரின் நூல்கள் இல்லாமல் செய்யப்பட்ட சோகசம்பவத்தை அறிவித்ததுடன் தங்கள் கையில் இன்னமும் வெளியிடப்படாமல் இருக்கும் தந்தையாரின் நூல் ஒன்றை வெளியிட இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் அவர் பேசுகையில் தன் தந்தையாரே ஐரோப்பிய வாழ் தமிழ் எழுத்தாளர்களில் அதிகம் பேசப்பட்டவரும் அதிகமாகக் கௌரவிக்கப்பட்டவரெனவும் புளங்காகிதப்பட்டு நன்றி பகிர்ந்ததுடன் ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் மேற்கொண்டுவரும் பணிகளுக்கும் நன்றியும் பாராட்டும் தெரிவித்து விடைபெற்றார்.

அடுத்து லண்டன் தமிழ் வானொலியின் சார்பில் அதன் அறிவிப்பாளர்கள் திரு.பரணிதரன், திரு.வசந்த், எழுத்தாளர் திருமதி.கெங்கா.ஸ்ரான்லியும் வாழ்த்துரை வழங்கி விழாவை சிறப்பித்தனர். இறுதியில் எழுத்தாளர் சங்கத்தின் உபதலைவர்.பொ.சிறீஜீவகனின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுகண்டது. ஈழத்தின் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட ஐம்பது ஆண்டுகால முற்போக்கு இலக்கிய வரலாற்றில் அமரர் அகஸ்தியர் (1926-1995) தனிப்பெரும் ஆளுமையாகத் திகழ்கின்றார். இலங்கை முற்போக்கு இலக்கிய கர்த்தாவாகக் கருதப்பட்ட இவர் பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்து தனது இறுதிநாள்வரை மார்க்ஸிய ஒளியில் இலக்கியத்தைத் தரிசித்தவர். சிறுகதை, நாவல், குறுநாவல், கவிதை, வானொலி நாடகம், விமர்சனம், உருவகக்கதை, குட்டிக்கதை, உணர்வூற்றுச் சித்திரம், நாட்டுக்கூத்துப் பாடல், இசை,மிருதங்கம் என பல் துறைகளில் புகழ்பூத்தவரும் 400 க்கும் மேற்பட்ட ஆக்கங்களைப் படைத்தவரும், 20க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதி வெளியிட்டவருமான இந்தக் கலை இலக்கியவாதியின் எழுத்துக்கள் என்றும் உயிர்வாழும்!. அவரின் நூல்களை ஜேர்மனியில் அறிமுகம் செய்து வைத்து ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் பெருமை சேர்த்துள்ளது.

**ப.பசுபதிராசா.**
**வுப்பெற்றால், ஜேர்மனி**